# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 313/மா/2025

நாள்: 30.06.2026

B. சரவணன்
சென்னை–600 017 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–9
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 06.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.08.2025 அன்று பெறப்பட்டு 313/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 06.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மேற்காணும் முகவரியில் வசிக்கும் நான் பொது மக்களுக்கான பொது பணிகளை சட்டரீதியாக நீதிமன்றம் வரை சென்று செய்து வருகிறேன். கதவு எண் 119/67, நியூ வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–24 மற்றும் கதவு எண் 6/25 சவுத் சிவன் கோவில் தெரு, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்கிற முகவரியில் உள்ள கட்டிடங்கள் தரை தளம் மற்றும் நான்கு தளங்கள் என மொத்தமாக கட்டப்பட்டுள்ளது. பார்கிங் இல்லாமலும் நான்குபுற இடைவெளிகள் இல்லாமல் அனுமதிக்கப்பட்ட அடுக்குகள் விட கூடுதலாக கட்டப்பட்டுள்ளது. இதனால் சட்டவிரோதமாக கட்டியதால் அரசுக்கு வருவாய் இழப்புகள் ஏற்படுத்தியும், மிக அருகாமையில் அரசு பள்ளி உள்ளது. பள்ளி குழந்தைகள் இவ்வழியாக கடந்தும் நடந்தும் செல்ல வேண்டி உள்ளது. குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி பெற்று வணிக வளாகம் இயங்குவதால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் நடு சாலையிலும் நடைபாதைகளிலும் வாகனங்களை விடுவதால் குழந்தைகளும் மாற்று திறனாளி முதியோர் என எவரும் இச்சாலையை பயன்படுத்த முடியவில்லை. பார்கிங் வசதிகள் இல்லாமல் உள்ளதால் மேலும்

இக்கட்டிடத்தில் நான்காவது அடுக்குகளில் தகர சீட்டுகளால் இரும்பு கூரை போல் முழுவதுமாக ஆபத்தான முறையில் கூடுதல் தளங்களாக கட்டப்பட்டுள்ளது. இதனால் கூறை காற்று வீசினால் சாலையில் செல்லும் பொது மக்கள் குழந்தைகள் என அனைவருக்கும் மிக பெரிய அளவு பாதிப்புகளை ஏற்படுத்தி உயிர் பலி ஏற்படும். எனவே ஐயா அவர்கள் நான் கூறிய இரண்டு கட்டிடத்தின் மீதும் சட்ட விதிகள் படியும் கூடுதலாக எத்தனை அடுக்குகள் எவ்வளவு உயரம் அகலம் நிகலம் குறுக்குகல் கட்டப்பட்டுள்ளது என்பதை அறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி உடந்தையாக உள்ள கடமைகளை செய்ய தவறிய A.E.ஜெகதீஷ் மீதும் மண்டல அலுவலர் மீதும் நடவடிக்கை எடுக்க உத்திரவிட கோரி மேல் முறையீட்டு மனு.

கடந்த 7.7.2025 அன்று ஒப்புகையுடன் அளித்த புகார் மனு இம்மனுவுடன் இணைப்பு.''

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 09.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால், அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 22.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 29.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் தனது 20.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112 கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட எண்.119/67, நியூ வெள்ளாளர் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600024 இல் உள்ள கட்டிடம் விதிமீறலுடன் கட்டப்பட்டதா? என அறிய அமலாக்க நடவடிக்கையாக தாக்கீது–1 வழங்கப்பட்டது. தாக்கீது 1க்கு பதில் ஏதும் வழங்காத நிலையில், தொடர் நடவடிக்கையாக 20.05.2026 அன்று 2ம் தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. இம்மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது தெரிவித்து கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மேற்காணும் முகவரியில் வசிக்கும் நான் பொது மக்களுக்கான பொது பணிகளை சட்டரீதியாக நீதிமன்றம் வரை சென்று செய்து வருகிறேன். சென்னை–24, கோடம்பாக்கம், நியூ வள்ளலார் தெரு, கதவு எண் 119/67, மற்றும் சென்னை–600 024 கோடம்பாக்கம், ஆற்காடு ரோடு, சவுத் சிவன் கோயில் தெரு, கதவு எண்.6/25 என்கிற முகவரியில் உள்ள கட்டிடங்கள் தரை தளம் மற்றும் நான்கு தளங்கள் என மொத்தமாக கட்டப்பட்டுள்ளது. பார்க்கிங் வசதி இல்லாமலும் நான்குபுற இடைவெளிகள் இல்லாமல் அனுமதிக்கப்பட்ட அடுக்குகள் விட கூடுதலாக கட்டப்பட்டுள்ளது. குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி பெற்று வணிக வளாகம் இயங்குவதால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் சாலையிலும், நடைபாதைகளிலும் வாகனங்களை நிறுத்துவதால், குழந்தைகளும் மாற்று திறனாளி முதியோர்கள் என எவரும் இச்சாலையை பயன்படுத்த முடியவில்லை. பார்க்கிங் வசதிகள்

இல்லாமல் உள்ளதால், மேலும் இக்கட்டிடத்தில் நான்காவது அடுக்குகளில் தகர சீட்டுகளால் இரும்பு கூரை போல் முழுவதுமாக ஆபத்தான முறையில் கூடுதல் தளங்களாக கட்டப்பட்டுள்ளது. எனவே, விதி மீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் நடவடிக்கை எடுக்காத மண்டல அலுவலர், உதவி பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நான் ஏற்கனவே சென்னை ஜார்ஜ்டவுன் என்ற முகவரியில் S.S.HYDERABAD BIRIYANI HOTEL தொடர்பாக அளிக்கப்பட்ட 27.06.2025 நாளிட்ட மனு குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை எண்.250/மா/2025 நாள் 03.03.2026ல் Trade Licence தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 27.07.2018 தேதியிட்ட தீர்ப்பினை மேற்கோள் காட்டி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இம்முறைமன்ற ஆணையில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் ஆணையினை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து நான் தனியாக ஒரு மனு அளிக்க உள்ளேன். அதன் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் இளநிலைப் பொறியாளர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112, கதவு எண்.119/67, நியூ வெள்ளாளர் தெரு என்கிற முகவரியில் உள்ள கட்டிடம் விதி மீறலுடன் கட்டப்பட்டதா என அறிய அமலாக்க நடவடிக்கையாக தாக்கீது–1 வழங்கப்பட்டது. தாக்கீது–1க்கு, பதில் ஏதும் வழங்காத நிலையில், தொடர் நடவடிக்கையாக 20.05.2026 அன்று 2–ஆம் தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினையும், கட்டிட உரிமையாளரிடம் பெறப்படும் பதிலின் அடிப்படையில், உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை, கோடம்பாக்கம், ஆற்காடு ரோடு, சவுத் சிவன் கோவில் தெரு, கதவு எண்.6/25, என்ற கட்டிடத்தின் புகார் தொடர்பாக எனக்கு சம்மந்தமில்லை என்று தெரிவித்தேன். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் இதற்கு யார் பொறுப்பு என கேட்ட பின், நானே இப்போது பொறுப்பு எனவும், மேற்கண்ட கட்டிடத்திற்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது எனவும் தெரிவித்தேன். மேற்கண்ட கட்டிடத்தினை தற்போது கள ஆய்வு செய்யவில்லை. இக்கட்டிடத்தை கள ஆய்வு செய்து விதிமீறல் இருப்பின் உரிய சட்டப் பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–24, கோடம்பாக்கம், நியூ வள்ளலார் தெரு, கதவு எண் 119/67, மற்றும் சென்னை–600 024 கோடம்பாக்கம், ஆற்காடு ரோடு, சவுத் சிவன் கோயில் தெரு, கதவு எண்.6/25 என்கிற முகவரியில் உள்ள கட்டிடங்கள் தரை தளம் மற்றும் நான்கு தளங்கள் என மொத்தமாக கட்டப்பட்ட கட்டிடத்தில் பார்க்கிங் வசதி மற்றும் கட்டிடத்தின் நான்குபுறமும் இடைவெளிகள் விடாமலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட அடுக்குகள் விட கூடுதலாக கட்டப்பட்டுள்ளது என்பதும், குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி பெற்று வணிக வளாகம் இயங்குவதால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் சாலையிலும், நடைபாதைகளிலும் வாகனங்களை நிறுத்துவதால், குழந்தைகளும் மாற்று திறனாளி முதியோர்கள் இச்சாலையை பயன்படுத்த முடியவில்லை என்பதும், இக்கட்டிடத்தில் நான்காவது அடுக்குகளில் தகர சீட்டுகளால் இரும்பு கூரை போல் முழுவதுமாக ஆபத்தான முறையில் கூடுதல் தளங்களாக விதி மீறி கட்டப்பட்டுள்ளதால், அக்கட்டிடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மற்றும் இக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத மண்டல அலுவலர் மற்றும் உதவி பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112, கதவு எண்.119/67, நியூ வெள்ளாளர் தெரு என்கிற முகவரியில் உள்ள கட்டிடம் விதி மீறலுடன் கட்டப்பட்டது குறித்து தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், கட்டிட உரிமையாளரிடம் பெறப்படும் பதிலின் அடிப்படையில், உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மற்றொரு கட்டிடமான சென்னை, கோடம்பாக்கம், ஆற்காடு ரோடு, சவுத் சிவன் கோவில் தெரு, கதவு எண்.6/25, என்ற கட்டிடத்திற்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடத்தினை இதுவரை கள ஆய்வு செய்யவில்லை என்பதும், இக்கட்டிடத்தினை கள ஆய்வு செய்த பிறகு, விதிமீறல் இருப்பின் உரிய சட்டப் பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112, கதவு எண்.119/67, நியூ வெள்ளாளர் தெரு என்கிற முகவரியில் உள்ள கட்டிடம் விதி மீறலுடன் கட்டப்பட்டது குறித்து வழங்கப்பட்ட தாக்கீதுகளின் மீது, கட்டிட உரிமையாளரிடம் பெறப்படும் பதிலின் அடிப்படையில், உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மற்றொரு கட்டிடமான சென்னை, கோடம்பாக்கம், ஆற்காடு ரோடு, சவுத் சிவன் கோவில் தெரு, கதவு எண்.6/25, என்ற கட்டிடத்திற்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்றும், இக்கட்டிடத்தினை இதுவரை கள ஆய்வு செய்யவில்லை என்பதால், இதனை கள ஆய்வு செய்த பிறகு, விதிமீறல் இருப்பின் உரிய சட்டப் பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் இளநிலைப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட இரண்டு கட்டிடங்களின் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழும் மற்றும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை, கோடம்பாக்கம் ஆற்காடு ரோடு, சவுத் சிவன் கோவில் தெரு, கதவு எண். 6/25 என்ற கட்டிடத்தை முறையாக கள ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான

நடவடிக்கை எடுக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1, புது தெரு,
தியாகராய நகர், சென்னை–600 017.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, 4வது குறுக்கு தெரு,
லேக்வியூ ரோடு, நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.
1/7/26